

அருப்புக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் ரூ.82.75 லட்சம் மதிப்பீட்டில் கோவிலாங்குளம், பெரிய கரிசல் குளம் கிராமத்தில் புதிய அங்கன்வாடி கட்டிடம் கட்டுவதற்கான பணியினை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் துவக்கி வைத்தார். உடன் விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ஆர்.ரமேஷ், செயற்குழு உறுப்பினர் சாகுல் ஹமீது, நகர் மன்றத் தலைவர் சிவப்பிரகாசம் சுந்தரலட்சுமி, ஒன்றிய செயலாளர்கள் பாலகணேஷன், பொன்ராஜ், நகர திமுக செயலாளர் ஏ.கே.மணி, நெசவாளர் அணி பழனிச்சாமி, பகுத்தறிவு பேரவை அமைப்பாளர் வேலுச்சாமி, பொதுக் குழு உறுப்பினர் கொப்பையா ராஜ், மாவட்ட கவுன்சிலர் பாலச்சந்தர், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் அழகு ராமானுஜம், தேர்தல் பணிக்குழு பொறுப்பாளர்கள் வெங்கட ராமன், ஜே.சி.பி.சுபா, உதவியாளர் பேச்சிமுத்து ஆகியோர் இருந்தனர்.



விருதுநகர் மாவட்டம், காரியாபட்டி ஊராட்சி ஒன்றியம், கல்குறிச்சியில் அமைந்துள்ள சமத்துவபுரத்தில் சுயமரியாதை சுடர் பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களின் திருவுருவச் சிலையை நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு , ராமநாதபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் நவாஸ்கானி ஆகியோர்கள் திறந்து வைத்தார்கள். இந்நிகழ்ச்சியில் காரியாபட்டி ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் முத்துமாரி, துணைத் தலைவர் ராஜேந்திரன், மாவட்ட கவுன்சிலர் தமிழ்வாணன், ஒன்றிய செயலாளர்கள் கண்ணன், செல்லம் மற்றும் கழக தோழர்கள் கலந்து கொண்டனர்.

# நாகையில் ரூ.5.08 கோடி மதிப்பில் 121 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்!

## அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி வழங்கினார்! என்.கௌதமன், உ.மதிவாணன் பங்கேற்பு!

நாகை.டிச.30-

நாகை மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் 36 மாற்றுத்திறனாளிகளுக்கு பெட்ரோல் ஸ்கூட்டர் உள்ளிட்ட 121 பயனாளிகளுக்கு ரூ. 5.08 கோடி மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு நாகை மாவட்ட ஆட்சிதலைவர் ப.ஆகாஷ் தலைமை தாங்கினார். நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவர் என். கௌதமன், தாட்கோ தலைவர் உ.மதிவாணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சியில் 36 மாற்றுத்திறனாளிகளுக்கு பொட்ரோல் ஸ்கூட்டர், 15 மாற்றுத்திறனாளிகளுக்கு செவித்திறன் மற்றும் பார்வைத்திறன் பாதிக்கப்பட்டவர்களுக்கான திறன் பேசியும், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பல் 11 பயனாளிகளுக்கு இலங்கை அரசால் சிறை பிடிக்கப்பட்டு மீட்க இயலாத விசை, நாட்டு படகு உரிமையாளயர்களுக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியில் நிவாரணத் தொகை உள்ளிட்ட 121 பயனாளிகளுக்கு ரூ. 5.08 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை நாகை மாவட்ட பொறுப்பு அமைச்சரும், பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில்மகேஷ்பொய்யாமொழி வழங்கினார்.

நிகழ்ச்சியில் நாகை நாடாளுமன்ற உறுப்பினர் வை.செல்வராஜ், கீழ்வேளூர் சட்ட மன்ற உறுப்பினர் நாகை மாலி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் க. ராஜேந்திரன், ப.கோவிந்தராசன், மறைமலை மாவட்டக் கழக அவைத்தலைவர் ப.செல்வம், மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி.மனோகரன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் உமாமகேஸ்வரிசங்கர், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் கார்த்திகேயன், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் ஆ.தாமஸ் அல்வாஎடிசன், மகா. குமார், ஆர்.டி.எஸ்.சரவாணன், செல்வ.செங்குட்டுவன், கே.பழனியப்பன், சோ.பா.மலர்வண்ணன், சிக்கல் என்.ஆனந்த், நகரக் கழகச் செயலாளர்கள் இரா.மாரிமுத்து, எம்.ஆர். செந்தில்குமார், பேரூர் கழகச் செயலாளர்கள் முகமது சுல்தான், மரியசார்லஸ், பொதுக்குழு உறுப்பினர்கள் எல்.எஸ்.ஈ. பழனியப்பன், கோசி.குமார், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் ஆர்.ஏ.டி.அண்ணாதுரை, பி.என். கார்த்தி, இளம்.சுந்தர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பின்னர் செய்தியாளர்களுக்கு பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ்பொய்யாமொழி அளித்த பேட்டியில் தமிழ் நாடு முதலமைச்சர் அவர்கள் ஏழை எளிய மக்களின் வாழ்வாதாரம் மேம்பட முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் வழியில் எண்ணற்ற பல திட்டங்களை தீட்டி செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக மகளிர்களுக்கு பலவேறு நலதிட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் நாகை, வேதாரண்யம் நகராட்சிகளில் பேருந்து நிலையம், வேதாரண்யம் நகராட்சியில் மருத்துவமனைக்கு கூடுதல் கட்டடம், வேளாங்கண்ணி அக்கரைபேட்டை இடையே மேம்பாலம் கட்ட நிதி, பொதுப்பணித்துறை மற்றும் நீர்வளத் துறை சார்பில் வாய்மேடு பகுதியில் தடுப்பணை, மகளிர் திட்டத்தின் கீழ் நிதி போன்றவைகளை பெற்று வளர்ச்சி பாதையில் செல்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மாற்றுத்தறினாளிகளின் நலத்துறை சார்பில் ரூ. 34.64 லட்சத்தில் மதிப்பீட்டில் 36 மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்பு சக்கரங்கள் பொருதப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர், ரூ. 2.10லட்சம் மதிப்பீட்டில் 15 மாற்றுத்திறநாளிகளுக்கு செவித்திறன் மற்றும் பார்வைத்திறன் பாதிக்கப்பட்டவர்களுக்கான திறன்பேசியையும், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் ரூ. 58லட்சம் மதிப்பீட்டில் 11 பயனாளிகளுக்கு இலங்கை அரசால் சிறைபிடிக்கப்பட்டு மீட்க இயலாத விசைப்படகுகள் மற்றும் நாட்டுபடகுகள் உரிமையாளர்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து நிவாரணத் தொகைக்கான காசோலையினையும், மாவட்ட தொழில் மையம் சார்பில் புதிய தொழில் முனைவோர் மற்றம் தொழில் நிறுவன மேம்பாட்டுத்திட்டத்தின்கீழ் ரூ. 15.49 லட்சம் மதிப்பீட்டில் 1 பயனாளிக்கு கம்பிவேலி தயாரித்தல் தொழில் தொடங்குவதற்கான ஆணையினையும், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் ரூ. 11,276 மதிப்பீட்டில் 2 பயனாளிகளுக்கு அயன்பாக்ஸ்சும், மகளிர் திட்டம் சராபில் ரூ. 3.95 கோடி மதிப்பீட்டில் 51 பயனாளிகளுக்கு வங்கி கடன் இணைப்பு வழங்குதற்கான ஆணை என ரூ. 5.08 கோடி மதிப்பில் 121 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில்மகேஷ்பொய்யாமொழி கூறினார்.

## கன்னியாகுமரி வருகை தரும் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு

# நெல்லை மாவட்டத்தில் 3 இடங்களில் சிறப்பான வரவேற்பு!

## மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் – பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் அறிக்கை!





நெல்லை.டிச.30-

இன்று 30.12.2024 கன்னியாகுமரி நடைபெறும் அய்யன் திருவள்ளுவர் வெள்ளி விழா நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக காலை 9 மணிக்கு தூத்துக்குடியில் இருந்து கன்னியாகுமரி செல்லும் நம் கழகத் தலைவர் திராவிட மாடல் முதலமைச்சர் அவர்களை நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் நெல்லை மாவட்ட பொறுப்பு அமைச்சரான கே.என்.நேரு தலைமையில் நெல்லை மாவட்டத்தில் 3 இடங்களில் 1 லட்சம் கழகத் தோழர்கள் மற்றும் பொது மக்கள் திரண்டு மாபெரும் வரவேற்பு அளிக்கப்படுகிறது. என நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா. ஆவுடையப்பன், நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன் கான் ஆகியோர் கூட்டாக அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

அது தொடர்பாக அவர்கள் அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது.

கன்னியாகுமரி நடைபெறும் அய்யன் திருவள்ளுவர் வெள்ளி விழா நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக இன்று 30.12.2024 காலை 9 மணிக்கு தூத்துக்குடியில் இருந்து கன்னியாகுமரி செல்லும் நம் கழகத் தலைவர் திராவிட மாடல் முதலமைச்சர் அவர்களை நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் நெல்லை மாவட்ட பொறுப்பு அமைச்சருமான கே. என்.நேரு தலைமையில் நெல்லை மாவட்டத்தில் 3 இடங்களில் 1 லட்சம் கழகத் தோழர்கள் மற்றும் பொது மக்கள் திரண்டு மாபெரும் வரவேற்பு அளிக்கப்படுகிறது.

அதன்படி காலை 9 மணிக்கு முதல் வரவேற்பானது கே.டி.சி நகர் பாலம் அருகிலும்,2 வது வரவேற்பானது நாங்குநேரி நீதிமன்றம் எதிரிலும்,3 வது வரவேற்பானது காலை 10 மணிக்கு பணகுடி பைபாஸ் அருகில் நெருஞ்சி காலனி பகுதியிலும் மாபெரும் வரவேற்பு அளிக்கப்படுகிறது.

எனவே கழக நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பகுதியில் நம் கழக முதல்வர் அவர்களை வரவேற்றிட கழக இருவண்ண கொடிகளுடன் திரளாக கலந்து கொண்டு வரவேற்றிட அன்புடன் கேட்டுக் கொள்வதோடு,இந்த வரவேற்பில் மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர,பேரூர், வட்ட, கிளைக் கழகச் செயலாளர்கள், நிர்வாகி கள், கழக சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள்,கழகத் தோழர்கள் மற்றும் பொது மக்கள் என அனைவரும் திரளாக கலந்து கொண்டு நம் திராவிட முதலமைச்சர் அவர்களுக்கு சிறப்பான வரவேற்பு கொடுத்திட அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். இவ்வாறு அவர்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

## தமிழ் மாநில காங்கிரஸ் கட்சித் தலைவர்

# ஜி.கே.வாசன் பிறந்த நாள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொலைபேசியில் வாழ்த்து!

**சென்னை, டிச.30-**

**தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஜி.கே.வாசன் பிறந்தநாளையொட்டி அவரை முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தொலைபேசியில் தொடர்பு கொண்டு வாழ்த்துத் தெரிவித்தார்.**

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (28.12.2024) பிறந்தநாள் காணும் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் தலைவருமான ஜி.கே.வாசன் அவர்களைத் தொலைபேசி வாயிலாகத் தொடர்புகொண்டு பிறந்தநாள் வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# வி.எம்.ஆர். சபாபதி

## டிசம்பர் 30 (2009)



**சென்னை, ஆயிரம்விளக்கு பகுதிக் கழக துணைச் செயலாளர், தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவை துணைத் தலைவர், மாநகர் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்றச் சங்கத் தலைவராக தொடர்ந்து 35 ஆண்டுகள் பொறுப்பு வகித்தவர்.**

**தொழிலாளர்களுக்கு பல உரிமைகளை பெற்றுத் தந்து, போக்குவரத்துத் தொழிலாளர்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.**

**நெருக்கடிநிலை காலத்தில் கழகத் தலைவர் கலைஞர் அவர்களுக்கு உறுதுணையாக தமிழகம் முழுவதும் அவரோடு சுற்றுப்பயணம் மேற்கொண்டு கழக வளர்ச்சிக்குப் பாடுபட்டவர்.**

**'தன்மான முரசமாக, தகுதிமிக்க தொழிலாளர் சங்கமாக முழங்கிய என்தோழன், முன்னணிக் கழகத் தொண்டன், முடிவெய்திய செய்தி கேட்டு முடிவில்லா சோகத்தில் ஆழ்ந்ததே பாட்டாளி வர்க்கம்! தொழிலாளர் துணைவன் மறைந்தாரே!" என தலைவர் கலைஞர் அவர்கள், தனது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## நாகையில் தி.மு.க. சார்பில்

# சுனாமி நினைவு நாள் அமைதி ஊர்வலம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் தலைமையில் நடைபெற்றது!

நாகை. டிச. 29-

2024 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 26ம் தேதி இந்தோனேஷியாவில் ஏற்பட்ட நில நடுக்கத்தால் சுனாமி உருவானது. இதனால் தமிழக கடலோர பகுதிகளில் ஆழிப்பேரலை உருவாகி பெரும் அளவில் உயிர்சேதம், பொருள் சேதம் ஏற்படுத்தயது. இதில் நாகை, மயிலாடுதுறை மாவட்டத்தில் உயிர்சேதம் அதிகம் இருந்தது. நெஞ்சை விட்டு நீங்காத இந்த சம்பத்தை நினைவு கூரும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் நாகை மாவட்டத்தில் கடலோ பகுதிகளில் சுனாமி நினைவு தினம் அனுசரிக்கப்பட்டு வருகிறது.

நாகையில் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் தி.மு.க. சார்பில் 20ம் ஆண்டு சுனாமி நினைவு தினத்தை முன்னிட்டு அமைதி ஊர்வலம் மற்றும் நினைவு ஸ்தூபில் அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது.

நாகை பழைய பேருந்து நிலையத்தில் இருந்து கழகத்தினர் நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்லைவர் தலைமையில் ஊர்வலமாக நாகை கடை வீதி வழியாக சென்று நாகை துறை முகத்தில் உள்ள சுனாமி நினைவு ஸ்தூயில் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

நிகழ்ச்சிகளில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் க.இராஜேந்திரன், ப.கோவிந்தராசன், இல.மேகநாதன், மறைமலை, மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி.மனோகரன், மாவட்டக் கழக பொருளாளர் மு.லோகநாதன், துணைச் செயலாளர் சோ. ரவிச்சந்திரன், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் கே. பழனியப்பன், ஆ.டி.எஸ்.சரவணன், செல்வ.செங்குட்டுவன், ஆ.தாமஸ் ஆல்வா எடிசன், மகா.குமார், சிக்கல் என். ஆனந்த், என்.சதாசிவம், உதயம் வே.முருகையன், சோ. பா.மலர்வண்ணன், நகரக் கழகச் செயலாளர்கள் இரா. மாரிமுத்து, எம்.ஆர்.செந்தில் குமார், பேரூர் கழகச் செயலாளர்கள் சி.சுப்பர மணியன், முகமது சுல்தான், மரியசார்லஸ், அட்சயலிங்கம், பொதுக் குழு உறுப்பினர்கள் எஸ்.பி.டி. சார்லஸ், கோசி.குமார், பன்னீர் செல்வம், கே.பாண்டியன், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் பி.என்.கார்த்தி, இரா.முருகையன், ப. உதயக்குமார், அ.பாரிபாலன், ஆர்.ஏ.டி. அண்ணாதுரை, இளம்.சுந்தர், கேஸ் வி.செந்தில், கமல், பால. முரளி, க.சத்தியமூர்த்தி, எஸ். புவனேஷ்வரி, எஸ்.பால்ராஜ், பெ. முருகானந்தம் மற்றும் மாவட்ட சார்பு அணி துணை அமைப்பாளர்கள், ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதி கள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

## 'மகா' டிசைன்ஸ் மகாராஜனின் தந்தை

# ஆ.சச்சிதானந்தம் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி! விழுப்புரத்தில் இறுதி ஊர்வலம்!



சென்னை, டிச. 30-

கழகத்தினரின் விளம்பரங்களை வடிவமைத்திடும் இராயப்பேட்டையில் உள்ள 'மகா' டிசைன்ஸ் மகாராஜனின் தந்தை ஆ. சச்சிதானந்தம் (வயது 94) 29.12.2024 ஞாயிறு காலை 7.10 மணியளவில் விழுப்புரத்தில் உள்ள அவரது இல்லத்தில், இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

மறைவு தகவல் அறிந்து கழகத்தினர் ஏராளமானோர் அன்னாரின் உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரின் இறுதி ஊர்வலம் இன்று (30.12.2024-திங்கள்) காலை 11 மணியளவில் அவரது சொந்த ஊரான விழுப்புரம், கீழ் பெரும்பாக்கம் எண்.39, கண்ணகித் தெருவில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்டு கீழ் பெரும்பாக்கம் இடுகாட்டில் இறுதிச்சடங்குகள் நடைபெறுகின்றன.

மறைந்த சச்சிதானந்தம் அவர்களுக்கு மகாராஜன் உள்பட 3 மகன்களும் ஒரு மகளும் உள்ளனர்.



சிவகங்கை மாவட்டம் சிவகங்கை தெற்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் மானாகுடியில் தலைவர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா உட்பட முப்பெரும் விழாவில் நடைபெற்ற வடமாடு மஞ்சுவிரட்டு போட்டியில் வெற்றி பெற்ற மாடுபிடி வீரர்களுக்கு தெற்கு ஒன்றிய கழக செயலாளர் எம். ஜெயராமன் பரிசுகள் வழங்கி பாராட்டினார். இந்த நிகழ்ச்சியில் மானாகுடி கிளை செயலாளர் அய்யப்பன் தெற்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் அழகு சுந்தரம், மனோகரன் உள்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.